**OS.70/2022**

**நாள். 06.11.2025.**

**பி.வா.சா.2 – தாமரை செல்வம்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

பிரதிவாதி என் மாமனார் என்றால் சரிதான். பிரதிவாதியின் மகள்தான் என் மனைவி சத்யா என்றால் சரிதான். வழக்கு விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிக்கு 12.10.2020ம் தேதி ரூ.25 இலட்சம் கடன் கொடுத்ததாகவும், அதற்கு என் மனைவி அடமான ஆவணம் எழுதிக்கொடுததுள்ளதாகவும் அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவியின் தகப்பனாரும் எனக்கு மாமனாருமான ராஜேந்திரன் வாதியிடம் ரூ.17 இலட்சம் பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்ததாக OS.No.70/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள நிரூபண வாக்குமூலம் நான் கூறியதன் அடிப்படையில்தான் வழக்கறிஞர் தயாரித்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் என் மனைவி மற்றும் மாமனார் வாதி கூறியுள்ளதுபோல் பணம் வாங்கவில்லை என்றும் அடமானகடன் பத்திரம் மற்றும் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுககவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் நான் வாதியிடம் 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.15 இலட்சம் கடன் வாங்கியதாகவும் அதற்கு 2020ம் ஆண்டு செம்டம்பர் வரை மாதம் ரூ.45 ஆயிரம் வட்டி செலுத்தி வந்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் நான் வாங்கிய கடனுக்காக தான் என் மனைவியும், மாமனாரும் அடமான கடன் பத்திரமும், கடனுறுதி சீட்டும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விவரத்தைத்தான் பதிவு அறிவிப்பிலும், எதிர்வழக்குரையிலும், பிரதிவாதி தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். இதே விவரத்தைத்தான் OS.61/2022 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கு விசாரணைக்கு வரும்போது எல்லாம் பலமுறை நான் என் மனைவியுடன், என் மாமனாருடனும் (பிரதிவாதி) இந்த நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்

என்றால் சரிதான். வாதி தரப்பில் என் மனைவியை குறுக்கு விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் மனைவி தாக்கல் செய்துள்ள எதிர்வழககுரையிலும், பதில் அறிவிப்பிலும், நிரூபணவாக்குமூலத்திலும் அடமான கடன் பத்திரம் எழுதி கொடுக்கும்போது ஏற்கனவே கொடுத்திருந்த காசோலைகளை திருப்பி கேட்டேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நானும் எனது நிரூபண வாக்குமூலத்தில் என் மனைவி அடமானகடன் பத்திரம் எழுதிகொடுக்கும்போது நான் கொடுதத காசோலைகளை திருப்பி கேட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி கொடுத்த பதில் அறிவிப்பிலும், தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் நானும் என் கணவரும் வாங்கிய ரூ.15 இலட்சத்திற்கு தான் காசோலையில் கொடுத்தோம் என சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் நானும் என் மனைவியும் வாங்கிய ரூ.15 இலட்சத்திற்கு தான் காசோலையில் கொடுத்தோம் என சொல்லவில்லை என்றால் சரிதான். நான், என் மனைவி, என் மாமனார் ஆகிய மூவரும் ஒரு ஆவணத்தை எழுதிக்கொடுக்கும்போது அதில் உள்ள விவரங்களை படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்வோம் என்றால் சரிதான், ஆனால் வாதி அடியாட்களுடன் வந்து மிரட்டி கையெழுத்து கேட்டதால் போட்டுக்கொடுத்தோம். அவ்வாறு அடியாட்களுடன் வாதி வந்து மிரட்டி கையெழுத்து வாங்கினார் என பதில் அறிவிப்புலோ, எதிர் வழககுரையிலோ, நிரூபண வாக்குமூலங்களிலோ சொல்லியிருக்கிறோமா என்றால் இல்லை. 2015ம் ஆண்டு நான் வாங்கியதாக சொல்லப்படும் ரூ.15 இலட்சம் என்னுடைய ஒப்பந்த தொழிலுக்கு வாங்கினேனா என்றால் ஆமாம். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்னென்ன ஒப்பந்த வேலைகள் பார்த்துள்ளேன் என்றால் நகராட்சி, ஊராட்சி கொடுக்கும் ஒப்பந்த வேலைகளை செய்வேன். ரோடுபோடுவது, குப்பை அள்ளுவது, கழிப்பறை மற்றும் பள்ளி கட்டிடங்கள் கட்டி கொடுப்பது ஆகிய வேலைகளை செய்தேன். 2019 முதல் 2021 வரை என்னென்ன ஒப்பந்த வேலைகள் எடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. ஒவ்வொரு வேலையை ஆரம்பிக்கும்போது ஆரம்பகட்ட செலவுகளை நான்தான் முதலீ டு செய்து ஆரம்பிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு முதலீட்டிற்கு பணம் தேவைப்படும்போது தெரிந்த நபர்களிடம் வாங்கி வேலை செய்துவிட்டு பணம்

வந்தவுடன் திருப்பி கொடுப்பேன் என்றால் சரிதான். சிலசமயம் என் மனைவி மற்றும் மாமனார் மூலம் பணம் வாங்கி வேலை செய்வேன் என்றால் சரியல்ல. நான் வாதி தவிர வேறு நபர்களிடம் என்னுடைய தொழிலுககாக கடன் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். யாரிடம் வாங்கினேன் என்றால் என்னால் கூற இயலாது. இராமநாதபுரம் JM.NO.I நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு STC.No.252/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு நான் ரூ.7,50,000/– பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்தேன் என்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமநாதபுரம் அண்ணாநகரை சேர்ந்த முரளி என்பவரிடம் ரூ.12 இலட்சம் பெற்றுக்கொண்டு நான் திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் சத்துணவு பாஸ்கர் என்பவரிடம் ரூ.5 இலட்சம் பெற்றுக்கொண்டு திருபபி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் இராமேஸ்வரம் தீர்சிதர் கொல்லையை சேர்ந்த கருப்பையா மகன் கண்ணனிடம் நானும், என் மனைவியும் ரூ.13 இலட்சம் பெற்றுக்கொண்டு திருப்பி கொடுக்காமல் ஏமாற்றி வருகிறோம் என்றால் சரியல்ல. அதேபோல் செந்தில் என்பவர் இராமநாதபுரம் JM.NO.II நீதிமன்றத்தில் காசோலை வழக்கு STC.No.127/2025 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு நான் ரூ.20 இலட்சம் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்து ஏமாற்றிவிட்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமேஸ்வரம் குற்றவியல் நீதிமன்றத்தில் கருணாகரன் என்பவரிடம் ரூ.15 இலட்சம் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்து ஏமாற்றிவிட்டதாக CC.48/2025 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் இராமேஸ்வரத்தை சேர்ந்த வீரபத்திரன் என்பவரிடம் ரூ.20 இலட்சமும், கேணிக்கரையை சேர்ந்த சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் ரூ.5 இலட்சமும், கம்மா காளைச்சாமி என்பவரிடம் ரூ.5 இலட்சமும், கண்ணகி தெரு அன்னமயிலிடம் 15 பவுன் நகை, என் சகோதரி மீனாளிடம் ரூ.5 இலட்சமும் 4 ½ பவுன் நகையும், பால்க்கரை ரமேஷ் என்பவரிடம் ரூ.5 இலட்சமும், மட்டியரேந்தல் பஞ்சாயத்து தலைவர் அய்யாசாமி என்பவரிடம் ரூ.19 இலட்சமும் வாங்கி திருப்பி கொடுக்காமல் ஏமாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. அதேபோல் வாதியின் மருமகனான பரமக்குடியை சேர்ந்த ஏழுமலையிடம் ரூ.14 இலட்சம் பெற்றுக்கொண்டு திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

பட்டிணம்காத்தானை சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கு ரூ.21 இலட்சம் கொடுக்க வேண்டும் என்றும், அவர் அதை கேட்டு எங்கள் வீட்டிற்கு வந்தபோது என் மனைவியிடம் தவறாக நடந்ததாக கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு வாதியிடம் நான் வாங்கியதாக சொல்லும் ரூ.15 இலட்சத்தை எப்படி வாங்கினேன் என்றால் கையில் பணமாகத்தான் வாங்கினேன். ஒரு பெரியதொகையை ரொக்கமாக கொடுக்கும் அளவிற்கு வாதிக்கு வசதி உள்ளது என்றால் சரிதான். வாதி யார்யாருக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எங்கு நிலம் வாங்கி ரியல்எஸ்டேட் செய்து வந்தார், வருகிறார் என்றால் குயவன்குடியிலும், என் அப்பாவிடம் நிலம் வாங்கியும் பிளாட்டுகளாக பிரித்து விற்றுள்ளார். வாதி ரியல்எஸ்டேட் தொழிலுக்கு வைத்திருந்த பணத்தைத்தான் நான் கேட்கும்போதும், என் மனைவி மற்றும் மாமனார் கேட்கும்போதும் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2019 ம் வருடம் கொரோனா வந்ததால் நான் வட்டிப்பணத்தை கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் செப்டம்பர் 2020 வரை வட்டிப்பணம் கொடுத்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. நான் வட்டி செப்டம்பர் 2020 வரை கொடுத்த பிறகு 12.10.2020 ம் தேதி எந்த கணக்கீட்டின் அடிப்படையில் ரூ.25 இலட்சத்திற்கு அடமானகடன் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்று கூறமுடியுமா என்றால் வாதி அடியாட்களை வைத்து மிரட்டியதால் எழுதி கொடுத்தோம். 12.10.2020 ம் தேதி அடமான ஆவணம் எழுதிக்கொடுத்த பின்பும் அதேதொகைக்கு 02.08.2021 ம் தேதி எந்த கணக்கீட்டின்படி ரூ.17 இலட்சத்திற்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தோம் என்று கூறமுடியுமா என்றால் வாதி அடியாட்களை வைத்து மிரட்டியதால் எழுதி கொடுத்தோம். வாதி அடியாட்களை வைத்து மிரட்டி ஆவணங்கள் எழுதி வாங்கிக்கொண்டது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. வாதிக்கு 81 வயது ஆகிறது என்றும், அவரால் அடியாட்களை வைத்து மிரட்டி எழுதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2015 ம் வருடம் ஆகஸ்டு மாதம் வாதி எனக்கு ரூ.15 இலட்சம் கொடுக்க வில்லை என்றும் அந்த தொகைக்காக எந்த ஆவணமும் வாதி எங்களை மிரட்டி எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான், என் மனைவி,

பிரதிவாதி ஆகிய மூவரும் கூட்டு சேர்ந்து ஏதாவதுஒரு பொய்யை கூறி வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டும் நோக்கத்தில் அடமான கடன் பத்திரமும், கடனுறுதி சீட்டு (வா.சா.ஆ.1) எழுதிக்கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அடமான ஆவணத்தில் சாட்சியாக உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். அந்த ஆவணம் OS.No.61/2022 வழக்கில் 1ஆவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்திற்குரிய புகைப்பட நகல் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பக்கம் 7ல் 1வது சாட்சியாக உள்ள கையெழுத்து என் கையெழுத்து என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.9**. அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்த நாளன்று சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை 10.00 மணிக்கு சென்று 11.30 மணிக்குள் எழுதிக்கொடுத்துவிட்டு திரும்பிவிட்டோம். அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது வாதி அவரது பேரன் யுவராஜ், நான், என் மனைவி தவிர வேறுயாரும் இருந்தார்களா என்றால் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இல்லை, வெளியில் அவரது அடியாட்கள் இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டு (வா.சா.ஆ.1) என எழுதப்பட்டுள்ள ஆவணத்தில் 2ஆவது சாட்சியாக நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.6 ஆவணம் எழுதிக்கொடுக்கும்போது நான், என் மனைவி, வாதி, என் மாமனார் ராஜேந்திரன் மற்றும் வாதியின் பேரன் காசிவிஸ்வநாதன் இருந்தோம் என்றால் காசிவிஸ்வநாதன் இல்லை. 12.10.2020ம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ரூ.25 இலட்சம் பெற்றுக்கொண்டுதான் என் மனைவி அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அதேபோல் 02.08.2021ம் தேதி வாதியின் வீட்டில் வைத்து வாதியிடம் ரூ.17 இலட்சம் பெற்றுக்கொண்டு பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்து ரூ.17 இலட்சம் பெற்றுக்கொண்டு சிலகாலம் வட்டித்தொகை செலுத்தி வந்தார் என்றால் தவறு. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வாதி எனக்கு உறவினர் என்றும், என் மனைவிக்கு மாமா என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஒரு பென்டிரைவ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த

பென்டிரைவ் என்ன உள்ளது என்றால் வாதி எங்கள் வீட்டிற்கு வந்து ரூ.16 இலட்சம் கொடுத்துவிடுங்கள், வட்டி எதுவும் வேண்டாம் என்று சொன்ன விவரம் உள்ளது. அதற்கு பிறகு நான் ரூ.3 இலட்சம் கொடுத்துவிட்டேன். நான் வீடியோ எடுத்த விவரம் என் மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வீடியோ எடுத்த விவரம் வாதிக்கு தெரியாது, வாதியிடம் அனுமதி பெறவில்லை. வீடியோ எங்கு வைத்து, எந்த தேதியில், எந்த கருவி மூலம் எடுக்கப்பட்ட விவரத்தை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வீடியோ எடுக்கும்போது யாரெல்லாம் இருந்தார்கள், எவ்வளவு நேரம் எடுக்கப்பட்டது, என்னென்ன விவரங்கள் பேசப்பட்டது என்று எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பென்டிரைவ் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டு தாக்கல் செய்யாததால் அந்த ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் விவசாயநிலங்கள் நல்லிருக்கை கிராமத்தில் உள்ளது. சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. என் பெயரில் எந்த சொத்துக்களும் இல்லைஎன்பதால்தான் என் மனைவி அவரது பெயரில் உள்ள சொத்தை அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தும், என் மாமனார் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தும் எனக்கு கடன் வாங்கி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் சொந்த ஊரான நல்லிருக்கையில் எனக்கு எவ்வளவு நிலம் சொந்தமாக உள்ளது என்றால் ஞாபகமில்லை, ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். எனக்கு சொந்த ஊரில் சொத்து உள்ளது விவரம் என் மனைவி, மாமனார் தெரியுமா என்றால் என் மாமனாருக்கு தெரியாது, மனைவிக்கு தெரியும். என் மனைவி எனக்கு எந்த சொத்தும் இல்லை என இந்நீதிமன்றததில் சாட்சியம் அளித்திருந்தால் அது தவறா என்றால் தவறுதான். வாதி என் மனைவி மீது இதே நீதிமன்றத்தில் OS.No.61/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மனைவிக்காக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் வாதிக்கு என் மனைவி எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தில் சாட்சியாக நான் கையெழுத்து போட்டதால் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வாங்கிய ரூ.15 இலட்சத்திற்கு 2015 ஆகஸ்ட் முதல் 2020 செப்டம்பர் வரை மாதாமாதம் ரூ.45 ஆயிரம் வட்டி செலுத்தியதற்கான ஆவணம் எதையும் தாக்கல்

செய்ய முடியுமா என்றால் முடியாது. பிரதிவாதி வாதியிடம் 02.08.2021 ம் தேதி வாங்கிய ரூ.17 இலட்சத்திற்கு சிலமாதம் மட்டும் மாதம் ரூ.34 வீதம் ரூ.3 லட்சம் வட்டி செலுத்தியுள்ளார் என்று சொன்னால் என் மாமனார் கடன் வாங்கவும் இல்லை, வட்டி கொடுக்கவும் இல்லை. பிரதிவாதி வட்டி செலுத்தும்போது வாதியிடம் வட்டி செலுத்தியதற்காக ஒரு பாக்கெட் நோட் புக்கில் குறித்து வாங்கிக்கொள்வார் என்றும், அதை என் மாமனார் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி என் மனைவிக்கும், மாமனாருக்கும் தனித்தனியாக வழக்கறிஞர் மூலம் வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். என் மனைவிக்கும், என் மாமனாருக்கும் வாதி அனுப்பிய இரண்டு அறிவிப்புகளுக்கும் சேர்த்து ஒரே பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் நான் வாதியிடம் 2015 ம் ஆண்டில் பணம் வாங்கியதாகவும், அதற்கு வட்டி செலுத்தியதாகவும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு நான், என் மனைவி, மாமனார் மூவரும் சேர்ந்து அனுப்பினோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு எங்கள் சார்பாக வாதிக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பு **வா.சா.ஆ.10**. நான் முத்திரைதாள் விற்பனையாளரிடம் ஏதாவது ஒரு காரணத்திற்காக முத்திரைதாள்கள் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அவ்வாறு முத்திரைதாள்கள் வாங்கும்போது ஆதார்கார்டு கொடுத்துத்தான் வாங்க முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டுக்கான முத்திரைதாள் என் மாமனார் பெயரில் உள்ள ஆதார்கார்டை காண்பித்து அவர் பெயரில் வாங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதியும், நானும், என் மனைவியும் வாதியின் வீட்டிற்கு 02.08.2024 ம் தேதி சென்று ரூ.17 இலட்சம் பெற்றுக்கொண்ட பிறகு என் மாமனார் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார் என்றும், அந்த கடனுறுதி சீட்டில் நானும், என் மனைவியும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அன்றைய தினம்தான் என் மாமனாரின் தாயார் பெயரில் உள்ள அசல் கிரையப்பத்திரத்தையும், என் மாமனார் பெயரில் உள்ள பட்டா மற்றும் அடங்கலையும் (வா.சா.ஆ.6 முதல் 8) கொடுத்து கடன் பெற்று கடனுறுதி சீட்டு என் மாமனார் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 30.11.2011. எந்த தேதியில் குடும்ப

அட்டை என் பெயரிலும், மனைவி பெயரிலும் வாங்கினோம் என்றால் ஞாபகமில்லை. எங்கள் குடும்ப அட்டையில் என் மனைவி பெயர் சேர்க்கும்போது என் மாமனார் குடும்ப அட்டையில் இருந்த என் மனைவியின் பெயரை நீக்கித்தான் என் குடும்ப அட்டையில் சேர்த்தோம் என்றால் சரிதான். பல வருடங்களாக என் குடும்பத்திற்கும், என் மாமனார் குடும்பத்திற்கும் தனித்தனியாக குடும்ப அட்டை உள்ளது என்றும், குடும்ப அட்டைக்காகத்தான் வாதியிடம் கையெழுத்து செய்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான், என் மனைவி, மாமனாருடன் கூட்டு சேர்ந்து கொண்டு வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.